## கருவூலக் கணக்குத் துறை

**அனுப்புநர்**
திரு.R.ரவிச்சந்திரன்,
சம்பளக் கணக்கு அலுவலர்,
சம்பளக் கணக்கு அலுவலர்,
224, தெற்கு வெளி வீதி,
மதுரை –1.

**பெறுநர்**
மாவட்டக் கல்வி அலுவலர்,
மாவட்டக் கல்வி அலுவலகம்,
பள்ளிக் கல்வித்துறை,
தல்லாகுளம், மதுரை –16

**ந.க.எண்.106/2021/பதபி 4 /அ1, நாள் 06.01.2022**

**ஐயா,**

**பொருள்** 7–வது ஊதியக்குழு – ஊதியப்படிகள் வழங்குவது – விபரம் கோருதல் – தொடர்பாக.

**பார்வை**
1. அரசாணை (Ms.No.303) நிதி (Paycell), துறை நாள் 11.10.2017.
2. அரசாணை (Ms.No.304) நிதி (Paycell), துறை நாள் 13.10.2017.
3. அரசாணை (Ms.No.306) நிதி (Paycell), துறை நாள் 13.10.2017.

*****

பார்வை (1)ல் காணும் அரசாணையின்படி தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அடிப்படை ஊதியம் மற்றும் தனி ஊதியங்கள் மாற்றியமைக்கப்பட்டு 01.01.2016 முதல் கருத்தியலாகவும் 10/2017 முதல் பணப்பலன் வழங்கப்பட்டு வருகிறது.

பார்வை (2) மற்றும் பார்வை (3)ல் காணும் அரசாணையின்படி அனைத்து துறை பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு திருத்தப்பட்ட சிறப்பு படிகள் மற்றும் இதர படிகள் வழங்கி ஆணையிடப்பட்டு, அவ்வாணையின்படி 01.10.2017முதல் ஊதியப்படிகள் அனுமதித்து வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இணைப்பில் காணும் பள்ளிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி வெளியிடப்பட்டுள்ள பார்வை (2) மற்றும் பார்வை (3) அரசாணைகளில் தெரிவிக்கப்படாத சிறப்பு படிகள், தனி ஊதியம் மற்றும் இதர படிகள் 10/2017 முதல் ஊதியப்பட்டியில் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வழங்குவதற்கு ஆணை ஏதேனும் இருப்பின் அந்த நகலினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பில் கண்டுள்ளவாறு தற்போதுவரை வழங்கப்பட்டு வரும் சிறப்பு படிகள், தனி ஊதியம் மற்றும் இதர படிகளுக்கு உரிய அரசாணை/விதிகள் அறியப்படாத பட்சத்தில் சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்களின் ஜனவரி 2022 சம்பள பட்டியலில் கேட்பு செய்யப்பட வேண்டாம் என்றும், மேலும் அவ்வாறு இதுவரை வழங்கப்பட்ட தொகையினை அரசு கணக்கில் செலுத்தி ஈடுகட்டுமாறு அன்புடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு-1.**

சம்பளக் கணக்கு அலுவலர்,
மதுரை.

**நகல்**

பள்ளிக் கல்வி இயக்குநர்,
பள்ளிக் கல்வி இயக்ககம்,
கல்லூரி சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை-6.

**ந.க.எண்.004768/எச்/இ2/2022, நாள் .03.2022**

நகல் தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலருக்கும் அனுப்பப்படுகிறது.

8/3/2022

நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்,
பள்ளிக் கல்வி ஆணையரகம், சென்னை-6.

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும்
மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

நகல்
கோப்புக்கு.